தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 310 - அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பீ'' கணக்கின் (விடய இலக்கம் 31001) பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த செலவு எல்லையான ரூபா 16,000,000 பெறுமதி ரூபா 13,000,000 வரை திருத்திக் கொள்வதற்கு இலக்கம் MUDC&H/2024/AD/B/01 என்ற கடிதத்தின் மூலம் கோரப்பட்டிருந்த போதிலும் அதற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எனினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட ஆகக் குறைந்த செலவு எல்லை ரூபா 14,000,000 ஆக பின்பற்றி காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த பெறுவனவு எல்லை ரூபா 13,000,000 ஆக திருத்துவதற்கு கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றில் பெறுவனவு எல்லை ரூபா 14,000,000 ஆக காண்பிக்கப்பட்டமை தவறு ஒன்றினால் ஏற்பட்டதுடன் சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.	குறித்துரைத்த கால வீச்சின் போது எல்லையினை திருத்துதல் அங்கீகரித்துக் கொள்ள வேண்டியிருந்ததுடன் இணக்கக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 14.9 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பண அறவிடல் மற்றும் மாதாந்த வட்டி அறிக்கையிடுவதற்காக பேணிச் செல்லப்படுகின்ற CC 10 பதிவேட்டில் கடன் தவணைப் பணத்திற்கு உரிய ஒவ்வொரு மாதங்களினதும் வட்டி கணிப்பிட்டு காண்பிக்கப்படாது இருந்ததுடன் கடன் மற்றும் வட்டி அறவிடல் கூட்டுத்தொகையும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய பிரகாரம் கடன் பணம் மற்றும் வட்டிப் பணம் அறவிடப்பட்ட போதும் அது CC 10 பதிவேட்டில் உரிய பிரகாரம் நாளது வரையாக்குவதற்கு தவறியிருந்ததுடன் அதனை எதிர்காலத்தில் நாளது வரையாக்கி சரியான பிரகாரம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கடன் பதிவேடுகள் உரிய பிரகாரம் மாதாந்த தவணைப் பணம் மற்றும் வட்டிப் பெறுமதியுடன் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	கடன் முற்பணம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்து இருந்த உத்தியோகத்தர்களின பெயர், சம்பள இலக்கம், விண்ணப்பித்த திகதி, கோரிக்கை இடப்பட்ட விண்ணப்பிக்கப்பட்ட காரணம் மற்றும் ஏனைய கடன் தொகைகளை உள்ளடக்கிய காத்திருத்தல் பட்டியல் திணைக்களத்தால் பேணிச் செல்ல	முற்பணத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிய காத்திருத்தல் பதிவேடு தற்போது பேணிச் செல்லப்படுவதுடன் அது 2025 ஏப்ரல் 08 ஆந் திகதி கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் கணக்காய்வினால் சுட்டிக்	கடன் விண்ணப்பங்களின் விரங்களை உள்ளடக்கிய காத்திருத்தல் பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	காட்டப்பட்டுள்ள பிரகாரம் பராமரித்துச் செல்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	கடன்பட்டோர் மேலதிக பெறுவனவுக் கணக்கில் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 16,892,320 மீதியில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 3,458,808 கடன்பட்டோர் பெறுமதி ஒன்று குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு உரிய பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 13,433,512 மீதி இனங்காணப்பட்டிருக்க வில்லை.	இதுவரை இனங்காணப்படாத ரூபா 13,433,512 மீதியை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	பெறுவனவு மீதிகள் உரிய பிரகாரம் இனங்கண்டு உரிய கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விற்பனை வருமானத்தை கணிப்பிடும் போது கைவிடப்பட்ட ரூபா 4,177,300 பெறுமதியான 06 விற்பனைப் பட்டியல்கள் முன்னைய ஆண்டு இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக இந்த ஆண்டின் விற்பனையில் உள்ளடக்கப்பட்டமையால் ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	தவறு ஒன்றின் காரணமாக முன்னைய ஆண்டு இலாபத்தில் சீராக்கப்படாமல் உரிய ஆண்டில் விற்பனைகளில் சீராக்கப்பட்டுள்ளது.	விற்பனை வருமானம் உரிய காலப் பகுதியின் பிரகாரம் கணக்கீடு செய்து இலாப நட்டங்களை சரியாக கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டில் ரூபா 19,615,678 தொகையில் விற்பனைக் கடன் விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப் பெறுமதியால் கடன் பட்டோர் மீதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	பட்டியல் இலக்கம் 2/7914 மற்றும் 2/7751 தவறு ஒன்றினால் கடன் விற்பனைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் எதிர்காலத்தில் கடன் விற்பனை மற்றும் காசு விற்பனைகள் உரிய பிரகாரம் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காசுக்கும் கடனுக்கும் விற்பனை, சரியாக கணக்கீடு செய்து உள்ளபடியான கடன் பட்டோர் மீதியை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	வருமானங்களை இனங்காணும் கொள்கையின் பிரகாரம் உரிய ஆண்டின் போது வாடிக்கையாளர்களுக்கு பூர்த்தி செய்து கையளிக்கப்பட்ட பொருள் மற்றும் செயற்றிட்ட செலவின கிரயமாக கருதப்படுகின்ற போதிலும் பூரத்தி செய்யப்படாத 04 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 61,056,929 பட்டியல் விநியோகிக்கப்பட்டு அப் பெறுமதி கடன் விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த பணிகள் கணக்காண்டின் இறுதியில் மேற்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக முற்பணமாக பெறப்பட்ட ரூபா	ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் குறிப்பு 11 இன் பிரகாரம் ரூபா 40,765,416 ஆக குறிப்பிடப்பட்ட பெறுமதியானது 2024 ஆம் ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்காக விநியோகிக்கப்பட்ட பட்டியல் பெறுமதியான ரூபா 61,056,929 தொகையில் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் 2025	ஆண்டிற்குரிய வருமானம் உரிய பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

	40,765,416 தொகை விற்பனை கணக்கில் இருந்து நீக்கப்பட்டு முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீதி விற்பனைப் பெறுமதியான ரூபா 20,291,513 உரிய கணக்குகளில் அகற்றப்பட்டமைக்கான சான்றுகள் காணப்பட்டவில்லை.	ஆம் ஆண்டில் செலுத்தப்படுகின்ற வேலை பத்திரங்களின் பெறுமதியாகும். இதன் போது இந்த வேலைப் பத்திரங்கள் 2025 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு குறித்துரைத்த பழுது பார்த்தல் அல்லது பராமரிப்புக்காக முன் கொண்டு செல்லப்படுவதுடன் குறிப்பு 11 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அது முற்பணத் தொகை ஒன்று அல்லாமல் இந்த ஆண்டின் கிரயத்தில் இருந்து எதிர்வரும் ஆண்டிற்காக முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியாக இருந்தமையால் அப் பெறுமதி மாத்திரம் விற்பனைக் கணக்கில் அகற்றப்பட்டுள்ளதுடன் ரூபா 20,291,513 பெறுமதி விற்பனையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	
(v)	முன்னைய காலப் பகுதியின் தவறுகளை சரி செய்யும் வகையில் முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் கீழ் ரூபா 19,916,346 திரண்ட இலாபத்தில் சீராக்கப்பட்ட போதிலும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 54 ஆம் பிரிவின் பிரகாரம் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் எந்த ஒரு வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட வில்லை.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் வெளிப்படுத்தும் கூற்று ஒன்று எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டு சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் உரிய பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vi)	கொடுப்பனவுப் பகுப்பாய்வின் பிரகாரம் 2024 செப்தெம்பர் மாதம் மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 1,310,015 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,296,368 ஆக முற்பண கொடுப்பனவு கணக்கில் பதியப்பட்டதன் காரணமாக மேலதிக நேர செலவினம் ரூபா 13,641 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	தகல்களை கண்டறிவதற்கான காலம் போதியளவில் இல்லாமையினால் தகவல்களைக் கண்டறிந்து சமர்ப்பிக்கப்படும்.	செலவினங்களைச் சரியாக கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vii)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கடன் பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36,941,553 தொகையில் ரூபா 4,045,992 தொகை மாத்திரம் அமைச்சின் செயலாளரிடம் இருந்து அமைக்கப்பட்ட குழுவின் மூலம் பதிவளிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு	2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கு உரிய கடன் பட்டோரில் பதிவளிக்கப்பட்ட ரூபா 36,941,554 மீதிக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அரச நிதித் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொண்ட பின்னர் மாத்திரம் கடன் பட்டோரை பதிவளிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

முரணாக ரூபா 36,941,553 மொத்த கடன் மீதியும் பதிவளிக்கப்பட்டிருந்தது.

(இ) களஞ்சிய முற்பணக் கணக்கு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	நிதிப்பிரமாணம் 501 இன் பிரகாரம் களஞ்சிய முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்படுதல் இலாபம் உழைக்கின்ற நோக்கில் அல்லது நட்டம் எதிர்பார்க்கும் நோக்கம் அல்லாது இருந்ததுடன் பொருட்கள் கொண்டு வரப்படுகின்ற விலையில் பொருட்கள் இருப்புக் கணிப்பீடு செய்வதற்கு ஆகும். அவ்வாறு கொள்வனவு செய்வதற்கு களஞ்சியத்தில் இடல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைளான செலவினங்களை மேவுகை செய்யும் வகையில் கிரயம் 08 சதவீதம் சேர்க்கப்பட்டு விநியோகிக்கப்படுவதாக 2024 ஆம் ஆண்டின் களஞ்சிய முற்பணக் கணக்கில் முன்பக்கத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே விநியோகித்தலின் மூலம் விநியோகித்தல் கிரயம் ரூபா 67,342,343 தொகை மற்றும் ரூபா 9,031,952 ஊழியர் செலவினம் மற்றும் வழங்கல் செலவினம் கழிக்கப்பட்ட பின்னர் ரூபா 4,177,325 பற்றாக்குறை ஒன்று கணக்குகளின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது.	விநியோகித்தல்களுக்கு உரிய 08 சதவீத பெறுமதியில் பிரதான களஞ்சியத்தில் ஊழியர் செலவினம் மற்றும் வழங்கல் செலவினம் மேவுகை செய்யப்பட்டதன் அளவு போதியளவில் இல்லாமையினால் 2024 ஆம் ஆண்டில் களஞ்சிய முற்பணக் கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையை ஆற்றிய வேலை முற்பணக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.	இலாபம் அல்லது நட்டம் ஏற்படாத வகையில் களஞ்சிய முற்பணக் கணக்கை செயற்படுத்துதல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் கணக்கின் நட்டமான ரூபா 4,177,325 பெறுமதி ஐந்தொகையில் ரூபா 3,209,322 நட்டமாக ரூபா 968,003 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் பிரதான களஞ்சியத்திற்காக திறைசேரிக் கட்டுநிதி ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட வரி இன்றிய ரூபா 968,003 கொள்வனவுகள் 2023 ஆம் ஆண்டில் களஞ்சிய முற்பணக் கணக்கில் கடன் கொடுத்தோர் மற்றும் கொள்வனவாக குறிப்பிடப்பட்ட தவறும் 2024 ஆம் ஆண்டில் செலவினத்தை விஞ்சி விநியோகித்தல் கணக்கு ஊடாக சரி செய்யப்பட்டதுடன் அந்த சரி செய்தல்கள் நாட்குறிப்புகளினால் பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தல் கணக்கின் பெறுமதி மற்றும் ஐந்தொகை மீதிக்கு இடையே ரூபா 968,003 வேறுபாடு காணப்பட்டது.	நிதிக்கூற்றுக்களில் கணக்கு மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும், நாளது வரையாகவும் பேணிச் செல்லப்படாது இருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i) நிலையான சொத்துப் பதிவேடு 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் முடிவுகளின் மூலம் சொத்துக்கள் பதிவேடு தயாரித்து நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.	நிலையான சொத்துப் பதிவேடு எதிர்காலத்தில் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்கள் முடிவுகளின் மூலம் நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ii) இருப்பு புத்தகம் நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் இருப்பு பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நாளது வரையாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இருப்பு பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(iii) இழப்பு பதிவேடு நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	பரீட்சித்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாளது வரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற படிவத்தின் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(iv) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நிதிபிரமாணம் 214 இன் பிரகாம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் நாள்தோறும் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்பு பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

(உ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i) மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனம், மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு, இயந்திர	முகாமைத்துவத்தால் கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விரிவான பட்டோலை

	உபகரணம், இயந்திர உபகரணப் பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்தின் பெறுமதி முறையே ரூபா 70,508,827 தொகை, ரூபா 120,429 தொகை, ரூபா 354,294,760 தொகை, ரூபா 6,525,302 தொகை மற்றும் ரூபா 1,682,924 இற்காக விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது.		பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 574,183,874 கடன்பட்டோர் மீதிக்காக விரிவான பட்டோலைக் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்தி கரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது.	இந்த பெறுமதிக்கு உரிய கடன் பட்டோருக்கு கடிதம் மூலம் அறிவித்து மீதி உறுதிப்படுத்தல் சான்றுதலைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதன் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளுக்காக சரியான விரிவான பட்டோலை பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணம் 503(1) இன் பிரகாரம் சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு உரிய கொடுப்பனவுகள் ரூபா 36,010,388 மற்றும் பெறுவனவுகள் ரூபா 7,838,301 இற்காக விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது.	கணக்காய்வினால் இந்த பெறுமதி பெறப்பட்ட முறை தெளிவாக்கப்படாது இருந்ததுடன் இந்த திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட திருத்தங்கள் அமைச்சரவைக் குறிப்பில் தகவல்கள் இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட சீராக்ககங்களுக்கு உரிய சரியான விரிவான பட்டோலைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.

முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியின் தொடர்பு	**அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள்**	**இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு**
1.6.1 (ஆ) (ii)	2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலமைக் கூற்றின் பிரகாரம் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36,941,553 ஆக இருந்த போதிலும் பதிவழிப்பதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் குழு அறிக்கையின் பிரகாரம் அந்த கடன் பட்டோரின் கூட்டுமொத்தம் ரூபா 4,045,992 ஆகும். அவ்வாறு இருக்கும் போது நிதிக் கூற்றுக்களில் 2008	1.6.1 (ஆ) (vii)

மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கு உரிய மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 36,941,553 ஆன மொத்த மீதியும் பதிவழிக்கப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 06 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு செலவின விடயக் குறியீட்டின் கீழ் சகல செலவின விடயங்களுக்காகவும் மொத்த தேறிய நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கு இடையிலான வேறுபாடுகள் அந்த செலவின விடயத்தின் தேறிய நிதியேற்பாட்டின் அளவில் 5 சதவீதம் அல்லது ரூபா 10,000 என்ற பெறுமதிலும் குறைந்த அல்லது அதிகரிக்க முடியாதிருக்குமாயின் அந்த வேறுபாட்டிற்கான காரணம் ஏ.சீ.ஏ 2(ii) படிவத்தில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு காண்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	எதிர்பார்க்கப்பட்ட செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட போதும் எதிர்பார்த்த பிரகாரம் கொடுப்பனவுகளுக்காக உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் செலவின விடயத்தின் சேமிப்புக்களுக்கான காரணங்களை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படாது இருந்த போதிலும் ரூபா 2,866,424 பெறுமதியால் மீளாய்வாண்டின் இறுதியில் பொறுப்புக்களுக்கு உடன்பட்டு இருந்தது.	முகாமைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது 2024 நவம்பர் மாதம் நாளது வரையாக்கப்பட்டு வழங்கப்பட்ட நிதி செயல் முன்னேற்ற அறிக்கையின் படி எதிர் மிகுதிக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் கணக்காய்வுப் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் உரிய பிரகாரம் அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணக் கோவையின் 94(1) பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதியேற்பாடு உள்ளதாயின் தவிர திணைக்களத்தில் எந்த ஒரு வேலையோ அல்லது சேவையோ அல்லது வழங்கல்களுக்காவோ	கணக்காய்வுப் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	நிதியேற்பாடுகள் தொடர்பாக சரியான ஆய்விணை மேற்கொண்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்களுக்கு

எந்த ஒரு செலவினமும் அல்லது கடப்பாடுகளும் ஏற்படுத்த முடியாது இருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் உரிய ஆய்வு மற்றும் திட்டமிடல் இன்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் 06 செலவின விடயங்களில் மதிப்பீட்டு நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 1,535,278 பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது.		உடன்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் லக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பான உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றது. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்குமாயின் அந்த மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்த நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது காலாண்டு ரீதியில் மீளாய்வு செய்து எழுத்து மூலம் மேற்கொள்வதற்காக கணக்காய்வு முகாமைத்துவ குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது தொடர்பான செயல் முன்னேற்றம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளளக் கணக்காய்வு எழுத்து மூலம் மீளாய்வு மேற்கொண்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

	அவதானிப்புக்கள்				
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமைகள்**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக்	-	சங்ஹிந்த செவண மாடி வீட்டு கட்டிடத் தொகுதியில் 60 வீடுகளை உடைய 06	வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளில் தொடர்ந்து	உரிய பிரமாணங்களின் பிரகாரம்

	குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 6.4 ஆம் பந்தி		மாடிகளைப் பரீட்சிக்கும் போது வீடுகள் மூடப்பட்டிருந்தமையினால் 33 வீடுகளை பரீட்சிக்க முடியாது இருந்ததுடன் பரீட்சிக்கப்பட்ட 27 வீடுகளில் 06 வீடுகள் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வீடு பரிசோதனை சபை அறிக்கை இட்டிருந்தது. வீடு உப வாடகைக்கு வழங்குதல், பணம் செலுத்தாமல் தங்குகின்ற விருந்தினர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் வைத்திருத்தல் தடை செய்யப்பட்டதாக உரிய பிரமாணத்தில் காண்பிக்கப்பட்ட போது வீடு வாடகைக்கு வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இடையே மூன்று உத்தியோகத்தர்கள் கணக்காய்வுத் திகதியான 2025 சனவரி 20 ஆந் திகதி வரையும் வீட்டின் குடியிருப்பில் இருந்து விலகிச் சென்றிருக்கவில்லை.	குடியிருக்கின்ற ஊழியர்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வாடகைக்கு வழங்கப்பட்ட வீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை				
(i)	நிதிப்பிரமாண இலக்கம் 504(1)	-	திணைக்களத்தால் ஒவ்வொரு காலாண்டின் இறுதியின் போது வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பூர்த்திப் பொருட்கள், மூலப் பொருட்கள், களஞ்சியப் பொருட்கள் மற்றும் வளங்கல் மற்றும் முற்பணக் கணக்குகளுக்காக குறித்துரைத்த எல்லை தொடர்பான கூற்று ஒன்று தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதியுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் காலாண்டு ரீதியில் வியாபாரக் கடன் கொடுத்தோர், கடன் பட்டோர், பூர்த்தி பொருட்கள், மூலப் பொருட்கள், களஞ்சியப் பொருட்கள், வழங்கல் மற்றும் முற்பணம் கணக்குகளுக்காக குறித்துரைத்த எல்லை தொடர்பான கூற்று ஒன்று தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதியுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் எல்லை தொடர்பாக காலாண்டு ரீதியான கூற்று ஒன்று தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் இலக்கம் 756(6)	-	பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து 2023 ஆண்டில் விற்றுத் தீர்த்தல்	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய மெய்மையாய்வு சபையின் மூலம்	நிதிப்பிரமாணங்களில் குறிப்பிட்டப்பட்ட கால

		அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்ட சொத்துக்களின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களை விற்பனை நடவடிக்கைகளுக்காக தயார் படுத்தியிருந்த போதிலும் 2023 மே 16 ஆந் திகதிய இலக்கம் அமப/23/0783/608/057 என்ற அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் விற்றுத் தீர்க்கும் செயற்பாடுகளுக்கு இடையூறு காணப்படுகின்றதா என கொன்ரோலர் ஜெனரல் இடம் விசாரணை செய்யப்பட்ட போதும் அது தொடர்பான ஆலோசனை பெற்றுக் கொள்ளலின் தாமதத்தின் காரணமாக 2025 ஆம் ஆண்டின் போது மேற்கூறப்பட்ட ஆண்டுகளுக்குரிய பொருள்கள் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது.	அட்டவணையின் பிரகாரம் பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	திறைசேரி - செயலாளரின் இலக்கம் MF/CG/02/(iv) மற்றும் 2017 யூன் 28 ஆந் திகதிய விநியோகிக்கப்பட்ட 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தின் சகல நிதியல்லாச் சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வருவதன் கீழ் கொன்ரோலர் ஜெனரலுக்கு செலுத்த வேண்டிய நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வில்லை.	வாகனம் தொடர்பாக கொம்ரோலர் ஜெனரால் இனால் அறிமுகப்படுத்தப் பட்ட NFAMS மொடியூல் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாளது வரையாக்கப்பட்டுள்ளது. கட்டிடம் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பான தகவல்களின் வன் பொருள் பிரதி அனுப்புவதற்கு தேவை இல்லாது இருந்ததாக மொடியூல் ஒன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வாய் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் பிரகாம் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் தீர்த்து வைக்கப்படாத ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பண வைப்பு மீதி ரூபா 616,800 மற்றும் மூன்றாந் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்கு கால ரீதியில் நிறுத்தி வைக்கப்பட்ட மீதி ரூபா 3,610,228 தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த நிறுவத்தி வைத்தல் பணம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் (Outcome) பெற்றுக் கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சுகாதார அமைச்சின் இரண்டாவது மாடியின் கூரை அமைக்கும் போது மிகவும் ஆபத்துடனான இடங்களை கழற்றி உக்கிப் போன பகுதிகளை அகற்றி பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அளவுகளுடனான வேலைப் பகுதியில் 25 சதவீதம் அளவிற்காக மேற்கொள்ளப்பட்டு 2024 நவம்பர் 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகுதிக்கு உரிய ரூபா 3,780,162 பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் 20 சதவீதம் முற்பணத் தொகை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருக்கும் போது அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படாமல் திணைக்களம் நிதியை ஈடுபடுத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிக்காக கிடைக்க வேண்டிய தொகை 2025 சனவரி மாதம் வரையிலும் கிடைக்கப் பெறாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்த கூரையின் காணப்பட்ட ஆபத்தான நிலைமையினையும், சுகாதார அமைச்சு அரச நிறுவனம் ஒன்றாக இருந்தமையினையும் கவனத்தில் கொண்டு இந்த கூரையின் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ச்சியாக மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	பெற வேண்டிய வருமானத்தை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நிர்மாணங்கள் ஆரம்பத்தின் போது முற்பண தொகை விண்ணப்பித்து நிதிக் கஸ்டத்தை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவிற்காக தற்காலிகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரச பொறியியல்	இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்ற இடம் தொடர்பாக	செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கொள்வதற்கோ

கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 104,412,899 ஆன மதிப்பீட்டிற்கு தபால் திணைக்களம் இணங்கி 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 3,795,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய நிர்மாணத்திற்கு உத்தேசிக்கப்பட்ட காணியின் மண் பொருத்தமற்றதாக இருந்தமை 2019 சனவரி 13 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது உறுதிப்படுத்தப்பட்டமையால் புதிதாக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் வேறொரு இடத்தில் நிர்மாணிப்பது என காண்பிக்கப்பட்டு மேலும் ரூபா 10,710,572 தொகை 2019 மார்ச் 14 ஆம் திகதி மற்றும் ரூபா 7,694,000 தொகை 2020 மார்ச் 06 ஆந் திகதியும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 22,199,572 தபால் திணைக்களத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணங்களின் செயல் முன்னேற்றம் 10 சதவீதம் அளவான மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. நிர்மாணங்கள் ஆரம்பித்து 06 வருட காலம் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கோ அல்லது பெறப்பட்ட தொகையை மீள செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிர்மாணிக்கப்பட்ட காலம் தொடர்பாக குறித்துரைத்த ஆலோசனை ஒன்று தபால் திணைக்களத்தினால் இது வரை உரியவாறு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இது தொடர்பாக தபால் திணைக்களத்திடம் கலந்துரையாடி உரிய நிர்மாணங்களை அவர்களின் தேவைகளுக்கு பொருத்தமான வகையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அல்லது பெறப்பட்ட மீள செலுத்துவதற்கோ தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன் வெளியிடல் வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இதில் இடம்பெற்ற தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் குறித்துரைத்த கால அட்டவணையில் இந்த அறிக்கை சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சட்டங்கள், விதிகள், ஏற்பாடுகளுக்கு இணங்க வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	அரசாங்க தொழில்சாலையின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக தொழிற்சாலைக் கட்டிடத்தின் முன்பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட சதுர மீற்றர் 265 ஐ உடைய காட்சிக்கூடம் அதற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நீண்டகாலமாக மூடி வைக்கப்பட்டிருந்தது.	காட்சிக் கூடத்திற்கு காட்சிப் பொருட்களை உள்ளடக்கி உத்தியோகத்தரும் பெயரிடப்பட்டுள்ளது. ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக பெயர் குறிப்பிட்ட உத்தியோகத்தர் இன்னுமொரு பணியும் கையளிக்கப்பட்டுள்ளது. ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட பின்னர் சிறந்த முறையில் காட்சிக் கூடத்தை திறந்து வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு முடியுமாக உள்ளது.	திணைக்களத்திற்கு உரிய சொத்துக்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும்.
(ii)	தொழிற்சாலை வளவில் அமைந்துள்ள பழைய சிற்றுண்டிச் சாலைக் கட்டிடத்தை பழுது பார்த்து இரவு ஊழியர் ஓய்வு இற்காக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவத்தால் பரிந்துரை செய்யப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் போது பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்காக கூரை கழற்றி அகற்றப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் 2025 பெப்ரவரி 20 கணக்காய்வுத் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்படாது இருந்ததுடன் கட்டிடத்தின் சுவர் மழைக்கு நனைந்து பாதிப்பு உட்பட்டுக் கொண்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.	அந்த அந்த ஆண்டில் கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் பிரகாரம் முகாமைத்துவம் செய்து இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றமையா லும் ஊழியர் சம்பளம் மற்றும் படிகளை செலுத்துவதற்கு உரிய உழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான பணிகளுக்கு முன்னுரிமை வழங்குதற்கு ஏற்பட்டிருந்தமையாலும் இந்த நிர்மாணங்கள் தாமதமடைந்திருந்ததுடன் இந்த நிர்மாணங்களை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதியேற்பாடை ஒதுக்கி கட்டிடத்தின் பழுது பார்த்தலை ஆரம்பிக்கும் வரை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	திணைக்களத்திற்கு உரிய ரூபா 2,200,000 பெறுமதி உடைய 03 வாகனங்கள் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் பழுது பார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்கு உரிய உடைந்த நிலையில் காணப்படுகின்ற வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உடைந்த வாகனங்களை விரைவாக பழுது பார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாண இலக்கம் 880 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் பணம், அரசாங்கத்தின் முத்திரை அல்லது பொருட்கள் போன்றவையை கையேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் அவ்வாறு இல்லையாயின் அரசாங்கத்தின் பணத்தைப் பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை அல்லது பொருட்கள் போன்றவற்றை விநியோகித்தல், தொடர்புடைய நிர்வாக ரீதியான பொறுப்பினை உடைய அல்லது அதிகார கையளித்தலின் கீழ் இந்த செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ள அல்லது உத்தியோகத்தர்களும், அரசாங்கத்தின் கணக்கிற்கு உரிய உறுதிச்சீட்டுக்கள், உறுப்படுத்துக்கின்ற காசோலையில் கையொப்பம் இடுகின்றவர்களும் சுயமாக கடமைகளில் நம்பகத்தன்மையுடன் நிறைவேற்றுகின்றமைக்கு 612 ஆவது அதிகாரமான அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதும் மேலதிக பணிப்பாளர் நாயகம், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்), பிரதான பொறியியலாளர், பொறியியலாளர் பிரதான கணக்காளர், கணக்காளர், களஞ்சியப் பொறுப்பாளர் மற்றும் சாரதிகள் பிணை வைப்பு செய்திருக்கவில்லை.	இது தொடர்பாக கண்டறிந்து பிணை அளவினை முன்மொழிந்து அமைச்சின் செயலாளருக்கு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல் வேண்டும்.

4.6 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது கள்வர்கள் வேலைத்தள வளவில் உட்புகுந்து வேலை தள இலக்கம் 11 (தற்போதைய வேலைத்தள இலக்கம் 16) இல் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் களவாடிச் சென்றிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. 2024 யூன் 15 ஆம் திகதி இரவு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் களவாடப்பட்ட பின்னர் நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீண்டும் 2024 யூன் 17 ஆந் திகதி இரவு	இனங்காணப்பட்ட சகல பொருட்களையும் மதிப்பீடு செய்து நட்டத்தை பாதுகாப்பு நிறுவனத்தின் மூலம் அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. களவு இடம்பெற்ற சந்தர்ப்பத்தின் போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் பாதுகாப்பு முறைமையை சரியாக அமுல்படுத்த வேண்டியிருந்ததுடன் ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நேரத்தில் கள்வர்கள் நிறுவனத்திற்குள் புகுந்து பொருட்கள் களவாடிச் சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. இரண்டு தினங்களின் போதும் களவாடிச் சென்றவைகளில் இனங்காணப்பட்ட உபகரணங்களின் பெறுமதி ரூபா 263,842 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிறுவன வளவில் பாதுகாப்பு இன்றி மற்றும் ஆவணங்களுக்கு கொண்டு வரப்படாது இருந்த உபகரணங்கள் கள்வர்களால் எடுத்துச் சென்றமையால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை கணிப்பிடுவதற்கு முடியாது இருந்தது.		
(ii)	2024 ஒக்தோபர் 22 ஆந் திகதி தொழிற்சாலையின் காட்சிக்கூடத்தில் முன்பக்க கண்ணாடியை உடைத்து கள்வர்கள் கண்காட்சிக் கூடத்தில் உட்புகுந்து பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களை களவாடிச் சென்றிருந்தனர். இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 103(1) மற்றும் நிதிப்பிரமாணம் 104(1) இன் கீழ் நடவடிக்கை எடுக்காது இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. ஒரே வருடத்தில் மூன்று சந்தர்ப்பத்தின் போது நிறுவனத்தின் பொருட்கள் களவாடப்பட்டமையால் அவற்றை தடுப்பதற்கு போதிளவான பாதுகாப்பு நடவடிக்கை பின்பற்றப்படாது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	நிதிப்பிரமாணம் 103(1) மற்றும் நிதிப்பிரமாணம் 104(1) இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும், களவினைத் தடுப்பதற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	தொழிற்சாலை திணைக்களத்தின் ஒவ்வொரு வேலைப் பிரிவுகளிலும் ஊழியர்கள் வெளி நிறுவனங்களில் இருந்து பெறப்பட்டு கட்டளை இடப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அந்தந்த வேலைத் தளங்களில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வீதிப் பத்திரங்களில் குறிப்பிட்டு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. வெளி நிறுவனங்களின் பணிகள் முடிவடைந்த பின்னர் அந்த கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொழிற்சாலைக்கு மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் 2025 சனவரி 25 கணக்காய்வுத் திகதி வரையிலும் மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை.	இவ்வாறு கையளிப்பதற்கு தாமதமான ஆயுதங்கள் தொடர்பாக கண்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	வேலைத் தளங்களுக்கு உரிய ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை மீள பெற்றுக் கொள்ளும் சரியாக திட்டமுறைமை ஒன்று தயாரித்து மேற்பார்வை செய்தல் வேண்டும்.

(ii)	அரசாங்க தொழிற்சாலை நடாத்திச் செல்லப்படுகின்ற கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள காணிக்குரிய சட்ட ரீதியான உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய உரித்து உறுதி சான்றிதழ் அல்லது உரித்து உறுதி பெறப்பட்டிருக்கவில்லை.	அதற்குரிய அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்து உள்ளதுடன் அதற்குரிய ஆவணங்கள் தயாரிப்பதற்காக உரிய சகல ஆவணங்களும் கொலன்னாவ பிரதேச செயலாளர் மூலம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளுக்காக சட்ட ரீதியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	அரசாங்க தொழிற்சாலையின் காணப்பட்ட பழைய கணனி மென் பொருள் முறைமையின் நலிவின் காரணமாக முறையற்ற வகையில் அமுல்படுத்தப்பட்ட இருப்புக் கட்டுப்பாடு, இருப்பு கட்டளையிடல், கொள்வனவு செய்தல், மதிப்பீடு தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கான காணப்பட்ட முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டின் போது கூறு விலைகள் கோரப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 2,954,700 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. கணனி மென்பொருள் முறைமையின் மூலம் மீள் கட்டளையிடல் மட்டத்தின் போது களஞ்சிய கட்டளை சுயமாக நிர்மாணிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றதாக மாதிரிகளில் காண்பிக்கப்பட்ட போதிலும் கையினால் எழுதப்பட்ட களஞ்சியக் கட்டளை கொள்வனவு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	மென்பொருளை அமுல்படுத்தும் போது உள்நாட்டு கட்டளை அமுல்படுத்தும் பல்வேறு பிரச்சனைகள் காணப்படுகின்றமையால் அதிக கவனம் செலுத்தி உள்நாட்டு கட்டளை அமுல்படுத்துதல் நல்ல நிலைமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. களஞ்சியக் கட்டளை தொடச்சியாக சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் எதிர்காலத்தில் அதனையும் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கணனி மென் பொருள் முறைமை மாதிரிகளின் பிரகாம் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் அமுல்படுத்தல் வேண்டும்.
(iv)	**அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் “பீ” கணக்கின் நிலுவைக் கடன் மீதி அறவிடப்படாமை.**		
	• ஓய்வு பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 420,905 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	ஓய்வு பெற்றுச் சென்ற 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 420,905 கடன் மீதிக்கு உரிய உத்தியோகத்தர்கள் நான்கு பேர்களிடம் இருந்து கட்டாய ஓய்வு பெற அனுப்பப்பட்டதுடன் அவர்களுக்கு 2025 ஆம் ஆண்டில் 55 வருடங்கள் பூர்த்தி அடைவதுடன் அத் திகதியில் ஓய்வூதிப் பணிக்கொடை மூலம் கடன் மீதியை அறவிடுவதற்கு	நிலுவை மீதியை அறவிடுவதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் எடுத்து நட்டத்தைக் குறைத்தல் வேண்டும்.

	நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய கடன் மீதி ரூபா 116,305 புத்தகங்களில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
• ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து முறையே ரூபா 125,500 மற்றும் ரூபா 177,800 தொகை 1 – 5 வரையிலான வருடங்களான காலம் அறவிடப்படாமல் காணப்பட்டது.	அவர்களுக்கு உரித்தான ஊழியர் பணிக்கொடையின் மூலம் அறவிடுதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவை மீதியை அறவிடுவதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் எடுத்து நட்டத்தைக் குறைத்தல் வேண்டும்.
• 2009 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வேலை நீக்கத்திற்கு உட்பட்டு இருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய முறையே ரூபா 142,605 மற்றும் ரூபா 27,640 கடன் மீதிகள் இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் இருவரிடம் இருந்து ஒரு உத்தியோகத்தர் கடன் மீதியான ரூபா 142,500 புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய ரூபா 27,640 கடன் மீதி சட்ட ரீதியான நடவடிக்கைகளின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் எடுத்து நட்டத்தை குறைத்தல் வேண்டும்.
• சேவையை விட்டுச் சென்று 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த 05 உத்தியோகத்தர்களிடம் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 242,500 கடன் மீதி மற்றும் சேவையை விட்டுச் சென்று 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த இரண்டு ஊழியர்களிடம் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 59,800 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சேவையை விட்டுச் சென்று 10 வருடங்களுக்க மேற்பட்ட காலம் கடந்த ஐந்து பேர்களிடம் இருந்து அறவிட வேண்டிய தொகையில் ரூபா 137,400 தொகை புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் ஏனைய கடன் மீதிகள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சில கடன் மீதிகளைப் பதிவளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் எடுத்து நட்டத்தை குறைத்தல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் வருடம் 2030 "நிகழ்ச்சி நிரல் " இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டில் சில நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய அளவு கோல்கள் குறித்துரைத்த ரீதியில் இனங்காண்பதற்கும் அமுல் படுத்துவதற்கும் திணைக்களம் தவறியிருந்தது.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் அதற்குரிய அளவு கோல்கள் இனங்காணப்பட்டுள்ளது.	நோக்கம் மற்றும் அளவு கோல்கள் மற்றும் இலக்கை உரிய பிரகாரம் இனங்கண்டு அமுல் படுத்துதல் வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக இருந்த 477 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையின் பிரகாரம் தடவைகளின் எண்ணிக்கை திருத்துவதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திணைக்களத்தின் நிதி ரீதியான இயலுமை மற்றும் சேவைத் தேவையின் பிரகாரம் அவ்வப்போது ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தற்போது இலக்கம் 01/14/05/02 (அ.கா.தொ.) என்ற மற்றும் 2025 சனவரி 16 ஆந் திகதிய ஆட்சேர்த்தல் கடிதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையான அடிப்படையில் ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.